993

சென்னைத் தமிழ்க்கழக வெளியீடு



தொல்காப்பியம் பொருளதிகாரம்

பகுதி - உ

P31, Dx1,1
N29
97230.

...ச்சிவாய முதலியார் பதிப்பு

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

கா. நமச்சிவாய முதலியார்

பதிப்பித்தது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-JUN1926
MADRAS

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1924

விலை ரூபாய் மூன்று

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS.

97230

முன்னுரை :

நன்னூல் முதலிய பின்னூல்கள் தோன்றவும் தொன்னூலாய தொல்காப்பியத்தின் வழக்காறு மழுங்கியது. மழுங்கவே, சங்கம் மருவிய நூல்களின் ஆராய்ச்சி குன்றியது. குன்றவே, பண்டைத் தமிழ்மக்களின் அன்பு ஆண்மை முதலியதிறன்களின் உண்மை மறைவதாயிற்று. ஆகவே, அவருள் சாதிசமய வேறுபாடுகள் பல்லாற்றானும் பல்கிப் பரவின. அவற்றால் இக்காலத்தே ஏற்பட்டுள்ள இடையூறுகள் பலவாம் என்பதனை அறிஞர் அறிவர்.

தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கணத்தைத் தழுவி இலக்கண விளக்கம் என்னும் அரிய நூல் ஒன்று பிற்காலத்தே தோன்றிப் பெரிதும் பயன்பட்டு வந்தது. ஆசிரியர் சிவஞான முனிவர் நன்னூலைப் பெரிதும் பாராட்டி, அதற்கோர் விருத்தியுரை கூட்டித் திகழச் செய்ததுமன்றி, 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்னும் மறுப்புநூல் ஒன்றையும் காட்டிய பின்னர், அவ்விலக்கண விளக்கப் பயிற்சியும் குறைவுற்றது. அதன் பின்னர் நன்னூல் ஒன்றே நின்று நிலவுவதாயிற்று. ஆகவே, இக்காலத்தே எழுத்தும் சொல்லும் ஆராய்வதே இலக்கணப் பயிற்சியாக ஏற்பட்டுவிட்டது.

சங்கநூல் முதலியவற்றை ஆராய்ந்து, பண்டைத் தமிழ் மக்களின் வழக்க ஒழுக்கங்களை உண்மையுற அறிதல் வேண்டும் என்னும் அவா அறிஞர் உள்ளத்தில் தோன்றி, அதன் பயனாக இந்நாளில் சிற்சில ஆராய்ச்சி நூல்கள் தோன்றுவன ஆயின. ஆகவே, தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்களையும் படித்துத் தேர்தல் வேண்டும் என்னும் நோக்கம் தமிழ் நாட்டில் ஆங்காங்கே கிளைத்திருக்கின்றது. இத்தகைய நன்முயற்சி ஈண்டு எழுதற்கு ஆதாரமான பண்டைத் தமிழ்நூல்களைப் பெரிதும் முயன்று அரிதின் வெளியிட்டுத்தந்த பேரறிவாளர் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்கட்கும் மகாமகோபாத்தியாயர் உத்தமதானபுரம் வே. சாமிநாத ஐயர் அவர்கட்கும் இத்தமிழுலகம் என்றும் மறவா நன்றிபாராட்டும் கடப்பாடுடையதாம்.

இக்காலத்தே பண்டைத் தமிழ் இலக்கணங்களும் இலக்கியங்களும் மூலபாடமாக வெளிவரின், அவை பெரிதும் பயன்தருவனவாம் என்பது கருதி, சங்கம் மருவிய இலக்கண இலக்கியங்களைக் கைச்சுவடிகளாகப் பதிக்கத் தொடங்கியுள்ளேன்.

அவற்றுள், இந்நூல் தொல்காப்பியம் பொருளதிகார மூலம் அடங்கியது. இப்பதிப்பில் கடின சந்திகளைப் பிரித்து, அவ்வச் சூத்திரங்கள் நுதலிய பொருளைத் தலைப்பில் அமைத்து, பாட பேதங்களை அடிக்குறிப்பாகக் காட்டியுள்ளேன். இளம்பூரண அடிகள் கொண்ட பாடத்தையே இதன்கண் முக்கிய பாடமாகக் கொண்டுள்ளேன். இவ்வாறே மற்றைய நூல்களும் வெளிவரும்.

இந்நூல்களை யான் விரும்புமாறு செவ்வனம் பதித்து வரும் ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ் என்னும் கம்பெனியின் அதிபர் ஸி. ஜயராம் நாயுடு அவர்கள் தமிழ்மொழியின்கண் கொண்டுள்ள பேரன்பு பெரிதும் பாராட்டற்பாலதாம்.

இம் முயற்சிக்கண், சென்னைத் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்தர பாடசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் மு. எதிராஜுலு நாயுடு என்பார் என்னுடனிருந்து ஏடு ஒப்பிடுதல் அச்சுப்பிழை திருத்தல் முதலிய செயல்களில் உழைத்து வருகின்றனர்.

ஏதும் அறியாத இச்சிறியேனை இப்பெரு முயற்சிக்கண் புகுத்தி, தோன்றாத் துணையாய் நின்று அருள்புரியும் தணிகைப் பெருமானை என் மன மொழி மெய்களால் முப்போதும் எப்போதும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

'காவேரியகம்'
சென்னை, 3-11-24.

கா. நமச்சிவாயன்.

பொருள் அடக்கம்

பொருளதிகாரம்

1. அகத்திணையியல் - 1
2. புறத்திணையியல் - 10
3. களவியல் - 20
4. கற்பியல் - 32
5. பொருளியல் - 45
6. மெய்ப்பாட்டியல் - 54
7. உவமவியல் - 59
8. செய்யுளியல் - 65
9. மரபியல் - 99

பிழை திருத்தம்

சூத்திரம்	வரி	பிழை	திருத்தம்
78	1	பாண்டாண்	பாடாண்
97	1௦	வேட்டகை	வேட்கை
144	34	புல்லிப்	புல்லிய
611	தலைப்பு	அந்தணர்கு	அந்தணர்க்கு

தொல்காப்பியம்
பொருளதிகாரம்

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

1. அகத்திணையியல்

[அகப்பொருட்குரிய திணை ஏழு என்பது]

1. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப. (க)

[நிலம்பெறுந் திணைகள் நான்கே என்பது]

2. அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே. (உ)

[முதல் கரு உரி எனப் பொருள்கள் மூன்று]

3. முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை. (ங)

[முதற்பொருள் : நிலமும் பொழுதும்]

4. முதலெனப் [1]படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே. (ச)

---

[1] படுப.

[நான்கு திணைக்கும் உரிய நிலங்கள்]

5. மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே. (ரு)

[முல்லைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்]

6. காரும் மாலையும் முல்லை. (சு)

[குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்]

7. குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர். (எ)

[குறிஞ்சிக்கு முன்பனிக்காலமும் உரித்தென்பது]

8. பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப. (அ)

[மருதத்திற்குரிய சிறுபொழுது]

9. [1]வைகறை விடியல் மருதம். (கூ)

[நெய்தற்குரிய சிறுபொழுது]

10. எற்பாடு
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும். (க0)

[பாலைக்குரிய பொழுதும் நிலமும்]

11. நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே. (கக)

---

1 வைகுறு.

OFFICE OF THE REGISTRAR 17 JUN 1926

[பின்பனிக்காலமும் பாலைக்கு உரித்தென்பது]

12. பின்பனி தானும் உரித்தென மொழிப. (௧௨)

[பாலைத்திணைக்குரிய உரிப்பொருள்]

13. இருவகைப் பிரிவும் நிலைபெறத் [1]தோன்றலும்
உரிய தாகும் என்மனார் புலவர். (௧௩)

[கால மயக்கம்]

14. [2]திணைமயங் குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் [3]இல்லென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே. (௧௪)

[முதற்பொருளும் கருப்பொருளும் வேறு திணையொடு மயங்கும் என்பது]

15. உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே. (௧௫)

[உரிப்பொருள்]

16. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் [4]அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே. (௧௬)

[பாலைத்திணைக்கும் பெருந்திணைக்குமுரிய உரிப்பொருள்]

17. கொண்டுதலைக் [5]கழிதலும் பிரிந்தவண் [6]இரங்கலும்
உண்டென மொழிப ஓரிடத் தான. (௧௭)

[கைக்கிளைக்குரிய காலமும் நிகழ்ச்சியும்]

18. கலந்த பொழுதும் காட்சியும் அன்ன. (௧௮)

---

1 தோன்றினும். 2 திணைமயக். 3 இன்றென. 4 இவற்றின் 5 கழியினும். 6 இரங்கினும்.

[முதற்பொருள் இருவகைப்படும் என்பது]

19. முதலெனப் படுவ தாயிரு வகைத்தே. (கசு)

[கருப்பொருள்]

20. தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு [1]தொகைஇய
அவ்வகை பிறவும் கருவென மொழிப. (உ0)

[பூவும் புள்ளும் மற்றத் திணைக்கண்ணும் மயங்கும் என்பது]

21. எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும். (உக)

[கருப்பொருளுள் மக்கட் பெயரின் வகை]

22. பெயரும் வினையுமென் றாயிரு வகைய
திணைதொறும் மரீஇய [2]திணைநிலைப் பெயரே. (உஉ)

[முல்லைக்குரிய மக்களின் பெயர்]

23. ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே. (உங)

[மற்றத்திணைமக்களும் அவ்வத்திணைக்குரிய பெயர் பெறுவர் என்பது]

24. ஏனோர் [3]மருங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே. (உச)

[கைக்கிளை பெருந்திணைக்குரிய மக்கள்]

25. அடியோர் பாங்கினும் [4]வினைவலர் பாங்கினும்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர். (உரு)

---

1 தொகைஇ. 2 திணைநிலப். 3 பாங்கினும். 4 வினைவல.

[கைக்கிளை பெருந்திணைக்குரிய தலைமக்கள்]

26. ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை யவரும் அன்னர். (உசு)

[பாலைக்குரிய உரிப்பொருள்]

27. ஓதல் பகையே தூதிவை பிரிவே. (உஎ)

[ஓதற்கும் தூதிற்கும் உரியார்]

28. அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன. (உஅ)

[பகைவயிற் பிரிதற்கு உரியார்]

29. தானே சேறலும் தன்னொடு [1]சிவணி
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே. (உகூ)

[தேவர், அறம், முறைமைசெய்வித்தல், பொருளாக்கல்
முதலிய காரணமாகப் பிரிதல்]

30. மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே. (௩0)

[அறங்காரணமாகப் பிரியும் தலைமக்கள்]

31. மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே. (௩க)

[முறை செய்வித்தற்குப் பிரியும் தலைமக்கள்]

32. மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப. (௩உ)

[வணிகர்க்கு உரிய பிரிவு]

33. உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான. (௩௩)

---

1 சிவணிய.

[வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரிய பிரிவு]

34. வேந்துவினை இயற்கை [1]வேந்தன் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்திடன் உடைத்தே. (௩௪)

35. பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே. ()

[அந்தணர்க்கு உரிய பிரிவு]

36. உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான. (௩௬)

[கலத்திற் பிரிவு தலைமகளுடன் இல்லை என்பது]

37. முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை. (௩௭)

[பெண்பால் மடலேறுதல் இல்லை என்பது]

38. எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான. (௩௮)

[தலைவி உடன்போக்கில் நற்றாய்க்கு உளதாகிய கிளவி]

39. தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தலென்
றன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றொடு விளக்கித்
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய. (௩௯)

[தலைவி உடன்போக்கில் செவிலிக்குரிய திறன்]

40. ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே. (௪0)

[பாலைக்கு உரியோர் பிரிவு]

41. அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே. (௪௧)

[1] வேந்தனின்.

[பிரிவின்கண் தோழிக்குக் கூற்று நிகழும் இடம்]

42. தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித் தன்னெஞ்சு கலுழ்ந்தோளை
[1]அழிந்தது களையென மொழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோ
டென்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன. (சஉ)

[கண்டோர் கூற்று நிகழும் இடம்]

43. பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்
ஊரது சார்பும் செல்லும் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய [2]வழியினும்
புணர்ந்தோர் பாங்கிற் [3]புணர்ந்த நெஞ்சமோ
டழிந்தெதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக் ககன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப. (சங)

[பிரிவின்கண் தலைமகனுக்குக் கூற்று நிகழும் இடம்]

44. ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்
ஒன்றிய [4]மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்

---

1 அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி. 2 கிளவியும். 3 புணர்ந்த்தி நெஞ்சமொ. 4 தோழியொடு.

கடைக்கொண்டு [1]பெயர்தலிற் கலங்கஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற் பட்ட ஒருதிறத் தானும்
நாளது சின்மையும் இளமைய தருமையும்
தாளாண் பக்கமும் தகுதிய தமைதியும்
இன்மைய [2]திளிவும் உடைமைய துயர்ச்சியும்
அன்பின தகலமும் அகற்சிய தருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினும் கையினும் வகுத்த பக்கமோ
டூதியம் கருதிய ஒருதிறத் தானும்
புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்
தூதிடை யிட்ட வகையி னானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்
பரத்தையின் அகற்சியிற் [3]பிரிந்தோட் குறுகி
இரத்தலும் தெளித்தலும் எனவிரு வகையோ
டுரைத்திற நாட்டம் கிழவோன் மேன. (சச)

[தலைமகள் முதலியோர்க்குக் கூற்று நிகழும் இடம்]

45. எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே. (சரு)

[பாலைக்கு உரியதோர் மரபு]

46. நிகழ்ந்தது நினைத்தற் கேதுவும் ஆகும். (சசா)

47. [4]நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே. (சஎ)

---

1 பெயர்த்தலிற். 2 தழிவும். 3 பரிந்தோட். 4 நினைந்தது.

[பாலைத்திணைக்கண் மற்றத்திணையின் பொருள்கள் விரவும் என்பது]

48. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவும் என்ப. (சஅ)

[அகப்பாட்டில் கூறப்படும் உவமை இருவகைப்படும் என்பது]

49. உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே. (சகூ)

[உள்ளுறையுவமம் பிறத்தற்குரிய இடம்]

50. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே. (ருo)

[உள்ளுறை உவமம் ஆமாறு]

51. உள்ளுறுத் திதனொ டொத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் [1]துரைப்பதை உள்ளுறை உவமம். (ருக)

[ஏனை உவமம் ஆமாறு]

52. ஏனை உவமம் தானுணர் வகைத்தே. (ருஉ)

[கைக்கிளைக்குரிய இலக்கணம்]

53. காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே. (ருங)

---

[1] துறுவதை.

[பெருந்திணைக்குரிய இலக்கணம்]

54. ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே. (௫௪)

[கைக்கிளைக்கு உரியதோர் மரபு]

55. முன்னைய நான்கும் முன்னதற் கென்ப. (௫௫)

[அகத்திணைக்கு உரிய செய்யுள் வரையறை]

56. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு [1]பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர். (௫௬)

[இயற்பெயர் கூறப்படா இடம்]

57. மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர். (௫௭)

[இயற்பெயர் கூறப்படும் இடம்]

58. புறத்திணை மருங்கிற் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே. (௫௮)

2. புறத்திணையியல்

[புறத்திணைக்குரிய இலக்கணமும் அதன் வகையும்]

59. அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே. (௧)

[1] பாங்கினும்.

[வெட்சித்திணைக்குரிய இலக்கணம்]

60. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும். (உ)

[வெட்சித்திணைக்குரிய துறை]

61. படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின் றுய்த்தல் நுவல்வழித் தோற்றம்
தந்துநிறை பாதீ டுண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற் றாகும். (ங)

[வெட்சித்திணைக்குரியதோர் துறை]

62. மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே. (ச)

[கரந்தைத்திணைக்குரிய இலக்கணமும் அதன் துறையும்]

63. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவர் ஏத்திய
ஓடாக் கழனிலை உளப்பட ஓடா
உடல்வேந் தடுக்கிய உன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்
ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்

சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலும்
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்
மனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்
வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்
றிருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற் கருளிய பிள்ளை யாட்டும்
காட்சி [1]கல்கோள் நீர்ப்படை நடுகல்
[2]சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று மரபிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட [3]எழுமூன்று துறைத்தே. (ரு)

[வஞ்சித்திணைக்குரிய இலக்கணம்]

64. வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே. (சு)

[வஞ்சித்திணைக்குரிய துறை]

65. இயங்குபடை அரவம் எரிபரந் தெடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந் தட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்

---

1. கால்கோள். 2 சீர்த்த. 3 மூவேழ்.

அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பிற் றுறைபதின் மூன்றே. (எ)

[உழிஞைத்திணைக்குரிய இலக்கணம்]

66. உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
[1]பன்னெறி மரபிற் றாகும் என்ப. (அ)

[உழிஞைத்திணையின் வகை]

67. அதுவே தானும் இருநால் வகைத்தே. (கூ)

[உழிஞைத் திணையின் பாகுபாடு]

68. கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்
தொல்லெயிற் [2]றிவர்தலும் தோலது பெருக்கமும்
அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும் திறற்பட
ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்
[3]வருபடை பேணார் ஆரெயில் உளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே. (கo)

[உழிஞைத்திணைக்குரிய துறை]

69. குடையும் வாளும் நாள்கோள் அன்றியும்
மடையமை ஏணிமிசை மயக்கமும் கடைஇச்
சுற்றமர் ஒழிய வென்றுகைக் கொண்டு
முற்றிய முதிர்வும் அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்

---

[1] அணிநெறி. [2] இவர்தலும். [3] வருபகை.

நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்
றூர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்
[1]மதின்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்
இகன்மதிற் குடுமிகொண்ட மண்ணுமங் கலமும்
வென்ற வாளின் மண்ணோ டொன்றத்
தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப. (கக)

[தும்பைத்திணைக்குரிய இலக்கணம்]

70. தும்பை தானே நெய்தலது புறனே
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்கும் சிறப்பிற் றென்ப. (கஉ)

[தும்பைத்திணைக்காவதோர் சிறப்பியல்பு]

71. கணையும் வேலும் துணையுற மொய்த்தலிற்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலம் தீண்டா அருநிலை வகையோ
டிருபாற் பட்ட ஒருசிறப் பின்றே. (கங)

[தும்பைத்திணைக்குரிய துறை]

72. தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்
[2]வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண் டெறிந்த தார்நிலை அன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய [3]எருமையும் [4]படையறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்
களிறெறிந் தெதிர்ந்தோர் பாடுங் களிற்றொடு

---

1 அகமிசைக் கிவர்ந்தோன் பக்கமும் இகன்மதிற், குடுமி கொண்ட மண்ணுமங் கலமும். 2 வென்றிமிகு. 3 பெருமையும். 4 படை மறுத்துப்.

பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்
திருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத் திறைவன் [1]வீழ்வுறச் சினைஇய
ஒருவன் மண்டிய, நல்லிசை நிலையும்
பல்படை ஒருவற் குடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே. (கச)

[வாகைத்திணைக்குரிய இலக்கணம்]

73. வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப. (கரு)

[வாகைத்திணையின் பாகுபாடு]

74. அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோ டாங்கெழு வகையான்
தொகைநிலை பெற்ற தென்மனார் புலவர். (கசு)

[வாகைத்திணைக்குரிய துறை]

75. கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய [2]வகையினும்

---

[1] வீழ்ந்தெனச் சினைஇ. [2] மரபினும்.

ஏரோர் களவழி அன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும் தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்
ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு [1]புணர்த்துத்
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும்
ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானும் ஆவி னானும்
துகடபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்
[2]கடிமனை நீத்த பாலின் கண்ணும்
எட்டுவகை நுதலிய [3]அவையகத் தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் [4]கொடையி னானும்
பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னானுமென்
றிருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே. (கஎ)

[காஞ்சித்திணைக்குரிய இலக்கணம்]

76. காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே. (கஅ)

---

[1] புணர்ந்து. [2] கட்டின். [3] அவையத் தானும். [4] கொடைமை யானும்.

[காஞ்சித்திணைக்குரிய துறை]

77. மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தி னானும்
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோற்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்
இன்னனென் றிரங்கிய மன்னை யானும்
இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்
இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்
நீத்த கணவற் றீர்த்த வேலிற்
[1] பேர்த்த மனைவி ஆஞ்சி யானும்
நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானும்
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந் தாகும் என்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
[2] மாய்ந்த பூசன் மயக்கத் தானும்
தாமே ஏங்கிய தாங்கரும் பையுளும்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நளிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும்
கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்

1 பேஎத்த மனைவி காஞ்சி யானும். 2 ஆய்ந்த.

காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபத நிலையும்
நல்லோள் கணவனொடு [1] நளியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட மாலை நிலையும்
[2] ஆய்பெருஞ் சிறப்பிற் புதல்வற் பயந்த
தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்
மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பிற் றுறையிரண் டுடைத்தே. (௧௯)

[பாடாண்டிணைக்குரிய இலக்கணமும் அதன் வகையும்]

78. பாண்டாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே. (௨௦)

[பாடாண்டிணைக் குரியதோர் இலக்கணம்]

79. அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப. (௨௧)

[பாடாண்டிணைக் குரிய செய்யுள்]

80. வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே. (௨௨)

[கடவுண்மாட்டு வரும் பாடாண் பக்கம்]

81. காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர். (௨௩)

---

[1] நணியழற். [2] மாய்பெருஞ்.

[குழவிப்பருவத்தும் காமப்பகுதி பாடப்பெறும் என்பது]

82. குழவி மருங்கினுங் கிழவ தாகும். (உச)

[மற்றையோரிடத்தும் காமப்பகுதி தோன்றும் என்பது]

83. ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான. (உரு)

[பாடாண்பாட்டில் இயற்பெயரும் கூறப்படும் என்பது]

84. மெய்ப்பெயர் மருங்கின் வைத்தன வழியே. (உசு)

[கடவுள்வாழ்த்தொடு சார்ந்துவரும் துறைகள்]

85. கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே. (உஎ)

[பாடாண்டிணைக்குரியதோர் துறை]

86. கொற்ற வள்ளை ஓரிடத் தான. (உஅ)

[பாடாண்டிணைக்குரிய துறை]

87. கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானும்
கண்படை கண்ணிய கண்படை நிலையும்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலை நோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉம்
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையோ டுளப்படத் தொகைஇத்
தொக்க நான்கும் உளவென மொழிப. (உகூ)

88\. தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த [1]நாளினிற் செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்
நடைமிகுத் [2]தேற்றிய குடைநிழல் மரபும்
மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்
மன்னெயில் அழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயிற் [3]றோன்றிய இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பிற்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே. (௩௦)

3. களவியல்

[களவொழுக்கத்தின் இலக்கணம்]

89\. இன்பமும் பொருளும் அறனும் என்றாங்
கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே. ()

---

[1] நாளணி, [2] தேத்திய. [3] றோன்றும்.

[தலைவனும் தலைவியும் எதிர்ப்படுங் காரணமும் அவரது இயல்பும்]

90. ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே. (உ)

[ஐயம் நிகழும் இடம்]

91. சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப
இழிந்துழி இழிபே சுட்ட லான. (ந)

[ஐயம் ஒழித்தற்காகும் கருவிகள்]

92. வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்
றன்னவை பிறவும் [1] ஆங்கண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப. (ச)

[குறிப்பறிதற்கு ஒருவரை ஒருவர் நோக்குவர் என்பது]

93. நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும். (ரு)

[நோக்கத்தால் வேட்கை கண்டவழி மெய்ப்பாடு நிகழும் என்பது]

94. குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர். (சா)

[தலைவற்குரிய குணங்கள்]

95. பெருமையும் உரனும் ஆடூஉ மேன. (எ)

---

[1] ஆங்கவண்.

[தலைவிக்குரிய குணங்கள்]

96\. அச்சமும் நாணும் மடனுமுந் துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப. (அ)

[களவுப் புணர்ச்சிக்கண் தலைமக்கட்கு உளதாகும் மெய்ப்பாடு]

97\. வேட்டகை யொருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்கா [1]டென்ற
சிறப்புடை மரபினவை களவென மொழிப. (கூ)

[இயற்கைப் புணர்ச்சியில் தலைவற்குக் கூற்று நிகழுமாறு]

98\. முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்
நன்னயம் உரைத்தல் நகைநனி யுறாஅ
[2] அந்நிலை அறிதல் மெலிவுவிளக் குறுத்தல்
[3] தன்னிலை உரைத்தல் தெளிவகப் படுத்தலென்
றின்னவை நிகழும் என்மனார் புலவர். (௧0)

[இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவற்குரிய கூற்றுக்கள்]

99\. மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்
இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்
நீடுநினைந் திரங்கல் கூடுதல் உறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்
பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்
பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்
நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்

---

1 டென்றச் 2 தந்நிலை. 3 தந்நிலை.

குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்
ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்
தண்டா திரப்பினும் மற்றைய வழியும்
சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்
அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கில்
கேடும் பீடும் கூறலும் தோழி
நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி
மடன்மா கூறும் இடனுமா ருண்டே. (கக)

[மற்றும் தலைவற்குக் கூற்று நிகழுமாறு]

100. பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்
அன்புற்று நகினும் அவட்பெற்று மலியினும்
ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக் கியல்பே. (கஉ)

[பாங்கர் துணையாக நிகழும் ஒழுக்கம்]

101. [1]பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப. (கங)

[கைக்கிளைக்கு உரிய ஒழுக்கங்கள்]

102. முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே. (கச)

[பெருந்திணைக்கு உரிய ஒழுக்கங்கள்]

103. பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே. (கரு)

[ஐந்திணைக்குரிய ஒழுக்கம்]

104. முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே. (கசு)

---

[1] பாங்கன்.

[தலைவிக்குக் கூற்று நிகழும் இடம்]

105. இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்தும்
காணா வகையிற் பொழுதுநனி இகப்பினும்
தானகம் புகாஅன் பெயர்தல் இன்மையின்
காட்சி ஆசையிற் களம்புக்குக் கலங்கி
வேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்
புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாண் எதிரும் [1]விருப்பின் கண்ணும்
தாளாண் எதிரும் பிரிவி னானும்
நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்
வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய எதிரும்
வரைவுடன் படுதலும் ஆங்கதன் புறத்துப்
புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்
[2]கிழவோள் மேன என்மனார் புலவர். (௧௭)

[தலைவிகூற்று வேட்கை புலப்பட நிகழா என்பது]

106. காமத் திணையிற் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆதலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி னான. (௧௮)

[கண்ணினான் வேட்கை புலப்படும் என்பது]

107. காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்
ஏமுற இரண்டும் உளவென மொழிப. (௧௯)

[தலைவியிடத்து உடம்பாடல்லாத கூற்று நிகழுமாறு]

108. சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள்வயி னான. (௨௦)

---

1 விருந்தின். 2 'கிழவோன்மேன' எனப்பாடங்கொண்டு அதற் கேற்ப உரையுங் கொள்வர் இளம்பூரணர்.

[மற்றும் தலைவிக்குக் கூற்று நிகழும் இடம்]

109. மறைந்தவற் காண்டல் தற்காட் டுறுதல்
நிறைந்த காதலிற் சொல்லெதிர் மழுங்கல்
வழிபாடு மறுத்தல் மறுத்தெதிர் கோடல்
பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்
கைப்பட்டுக் கலங்கினும் நாணுமிக வரினும்
இட்டுப்பிரி விரங்கினும் அருமைசெய் தயர்ப்பினும்
வந்தவழி எள்ளினும் விட்டுயிர்த் தழுங்கினும்
நொந்துதெளி வொழிப்பினும் அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்
வருந்தொழிற் கருமை வாயில் கூறினும்
கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத் துயிர்த்தலும் உயிர்செல
வேற்றுவரைவு வரினது மாற்றுதற் கண்ணும்
நெறிபடு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்
பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி
ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்
அருமை சான்ற நாலிரண்டு வகையின்
பெருமை சான்ற இயல்பின் கண்ணும்
பொய்தலை அடுத்த மடலின் கண்ணும்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்
வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்
குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்
வரைவுதலை வரினும் களவறி வுறினும்
தமர்தற் காத்த காரண மருங்கினும்
தன்குறி தள்ளிய தெருளாக் காலை
வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித்

தன்பிழைப் பாகத் தழீஇத் தேறலும்
வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்
பொழுதும் ஆறும் புரைவ தன்மையின்
அழிவுதலை வந்த சிந்தைக் கண்ணும்
காமஞ் சிறப்பினும் அவனளி சிறப்பினும்
ஏமஞ் சான்ற உவகைக் கண்ணும்
தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தையும்
அன்னவும் உளவே ஓரிடத் தான. (உக)

[மற்றும் தலைவிக்குக் கூற்று நிகழும் இடம்]

110. வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்
தானே கூறுங் காலமும் உளவே. (உஉ)

[தலைவி கூற்று கற்பும் நாணும் கடவா என்பது]

111. உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே. (உ௩)

[தோழிக்குரிய கிளவிகள் ஆமாறு]

112. நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி எதிர்ப்பா டுள்ளுறுத்து வரூஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது

பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்
குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப் [பினும்
பெருமையிற் பெயர்ப்பினும் உலகுரைத் தொழிப்
அருமையின் அகற்சியும் அவளறி வுறுத்துப்
[1]பின்வா வென்றலும் பேதைமை ஊட்டலும்
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்
அஞ்சியச் சுறுத்தலும் உரைத்துழிக் கூட்டமோ
டெஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும்
வந்த கிழவனை மாயம் செப்பிப்
பொறுத்த காரணம் குறித்த காலையும்
புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும்
குறைந்தவட் படரினும் மறைந்தவள் அருகத்
தன்னொடும் அவளொடும் [2]முன்னம்முன் தலைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்
நன்னயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்
எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்
வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தினும்
புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்
ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்
செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்புதலை யடுத்த வன்புறைக் கண்ணும்
ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்
காப்பின் கடுமை கையற வரினும்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதல் மிகுதி உளப்படப் பிறவும்
நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் [3]இறப்பும் நோக்கி

---

1 பின்வர. 2 முதல்முன் றலைஇப். 3 இறப்ப.

அவன்வயிற் றோன்றிய கிளவியொடு தொகைஇ
அணைநிலை வகையான் வரைதல் வேண்டினும்
ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்
அவன்விலங் குறினும் களம்பெறக் காட்டினும்
பிறன்வரை வாயினும் அவன்வரைவு மறுப்பினும்
முன்னிலை அறனெனப் படுதலென் றிருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன் பட்டோற் கடாவல் வேண்டினும்
ஆங்கதன் தன்மையின் வன்புறை உளப்படப்
பாங்குற வந்த நாலெட்டு வகையும்
தாங்கருஞ் சிறப்பிற் றோழி மேன. (உச)

[செவிலிக்குரிய கிளவிகள் ஆமாறு]

113. களவல ராயினும் காமமெய்ப் படுப்பினும்
அளவுமிகத் தோன்றினும் தலைப்பெய்து காணினும்
கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்
ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்
காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்
தோழியை வினவலும் தெய்வம் வாழ்த்தலும்
போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்
பிரிவின் எச்சத்தும் மகணெஞ்சு வலிப்பினும்
இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்
இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியோ
டன்னவை பிறவும் செவிலி மேன. (உரு)

[மேற்கூறிய கிளவிகள் நற்றாய்க்கும் உரியவாமாறு]

114. தாய்க்கும் வரையார் உணர்வுடம் படினே. (உசா)

[நற்றாயும் செவிலியும் தலைவியின் இயல்பைத் துணியுமாறு]

115. கிழவோன் அறியா அறிவினள் இவளென
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக் கிளவியின் அறிதலும் உரித்தே. (உஎ)

[தலைவி வேட்கை தெரிக்குமாறு]

116. தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை
பிறநீர் மாக்கள் இன்றிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப. (உஅ)

[பாங்கன் முதலிய நிமித்தமின்றித் தலைவனும் தலைவியும் தாமே கூடுவர் என்பது]

117. காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவர் ஆதலும் உரித்தே. (உகூ)

[குறியிடங்கூறுதல் தலைவிக்கு உரியதென்பது]

118. அவன்வரம் பிறத்தல் அறந்தனக் கின்மையின்
களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்
தான்செலற் குரியவழி ஆக லான. (௩0)

[தோழியினுனும் கூட்டம் நிகழும் என்பது]

119. தோழியின் முடியும் இடனுமா றுண்டே. (௩க)

[களவுப்புணர்ச்சிக்குரிய நாள்வரையறையும் நிமித்தமும்]

120. முந்நாள் அல்லது துணையின்று கழியா
தந்நா ளகத்தும் அதுவரை வின்றே. (௩உ)

[தலைவிக்குரியதோர் இயல்பு]

121. பன்னூறு வகையினும் தன்வயின் வரூஉம்
நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்
துணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்
துணையோர் கருமம் [1] ஆத லான. (௩௩)

[செவிலி]

122. ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவோள் செவிலி யாகும். (௩௪)

[தோழி]

123. தோழி தானே செவிலி மகளே. (௩௫)

[தோழிக்குரிய இயல்பு]

124. சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே. ()

[தோழிக்குரிய திறன்]

125. குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென
மதியுடம் [2]படுதல் ஒருமூ வகைத்தே. (௩௭)

[மற்றும் தோழிக்குரியதோர் திறன்]

126. அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது
பின்னிலை முயற்சி பெறாளென மொழிப. (௩௮)

[மற்றும் தோழிக்குரிய திறன்]

127. முயற்சிக் காலத் ததற்பட நாடிப்
புணர்த்தல் ஆற்றலும் அவள்வயி னான. (௩௯)

---

1 ஆக. 2 படுத்தல்.

[குறியின் வகை]

128. குறியெனப் படுவ திரவினும் பகலினும்
[1] அறியக் கிளந்த ஆற்ற தென்ப. (சO)

[இரவுக்குறிக்குரிய இடம்]

129. இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான. (சக)

[பகற்குறிக் குரிய இடம்]

130. பகற்புணர் களனே புறனென மொழிப
அவளறி வுணர வருவழி யான. (சஉ)

[குறியல்லவற்றால் மயங்குதல் தலைவிக்குரிய தென்பது]

131. அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே
அவன்குறி [2] மயங்கி அமைவொடு வரினே. (சங)

[இடத்திற் கேற்ற ஒழுக்கமும் தலைவிக்குரித்து என்பது]

132. ஆங்காங் கொழுகும் ஒழுக்கமும் உண்டே
ஓங்கிய சிறப்பின் ஒருசிறை யான. (சச)

[களவின்கண் தலைவற்குரியதோர் ஒழுக்கம்]

133. மறைந்த ஒழுக்கத் தோரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை. (சரு)

[மற்றும் களவின்கண் தலைவற்குரிய ஒழுக்கங்கள்]

134. ஆற்றின தருமையும் அழிவும் அச்சமும்
ஊறும் உளப்பட அதனோ ரன்ன. (சசா)

---

1 அறியத்தோன்றும். 2 மயங்கிய.

[தலைவியின் தந்தை முதலாயினோர் களவு உணருமாறு]

135. தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப.(சஎ)

[செவிலியினால் நற்றாய் களவு உணருமாறு]

136. தாயறி வுறுதல் செவிலியோ டொக்கும். (சஅ)

[களவு வெளிப்படுதற்குரிய காரணங்கள்]

137. அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவன் ஆகும். (சகூ)

[வரைவுக்குரிய காலம்]

138. வெளிப்பட வரைதல் படாமை வரைதலென்
றாயிரண் டென்ப வரைதல் ஆறே. (ரு0)

[வரைதன்முன் ஓதற்பிரிவு முதலியன நிகழா என்பது]

139. வெளிப்படை தானே கற்பினோ டொப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்றுபொரு ளாக
வரையாது பிரிதல் கிழவோற் கில்லை. (ருக)

4. கற்பியல்

[கற்பொழுக்கத்திற்குரிய இலக்கணம்]

140. கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக் [வே.
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வது

[கொடுப்போர் இன்றியும் மணம் நிகழும் என்பது]

141. கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான. (உ)

[உயர்ந்தோர்க்குரிய மணமுறைகள் இழிந்தோர்க்கு
ஆதலும் உண்டு]

142. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே. (௩)

[மணமுறை வகுத்தமைக்குக் காரணம்]

143. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப. (௪)

[தலைவற்குக் கூற்று நிகழும் இடம்]

144. கரணத்தின் அமைந்து முடிந்த காலை
நெஞ்சுதலை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்
எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்
அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்
நன்னெறிப் படரும் தொன்னலப் பொருளினும்
பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக்
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்
நாமக் காலத் துண்டெனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்
அல்லல் தீர ஆர்வமொ டளைஇச்
சொல்லுறு பொருளின் கண்ணும் சொல்லென
எனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கென
அடிசிலும் பூவும் தொடுதற் கண்ணும்
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கம் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமரல் உள்ளமொ டளவிய இடத்தும்

அந்தரத் தெழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்
அழியல் அஞ்சலென் றாயிரு பொருளினும்
தானவட் பிழைத்த பருவத் தானும்
நோன்மையும் பெருமையும் மெய்கொள [1]அருளிப்
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்
புதல்வற் பயந்த [2]புனிறுதீர் பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணை [3]புல்லிப் புல்லா
துயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகி
[4]அல்கல் முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிப் இரவினும்
உறலருங் [5]குறைமையின் ஊடல் மிகுத்தோளைப்
பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்
பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
[6]பரிவு நீக்கிய பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும்
சென்றுகை இகந்துபெயர்த் துள்ளிய வழியும்
காமத்தின் வலியும் கைவிடின் அச்சமும்
தானவட் பிழைத்த நிலையின் கண்ணும்
உடன்சேறல் செய்கையொ டன்னவை பிறவும்
மடம்பட வந்த தோழிக் கண்ணும்
வேற்றுநாட் டகல்வயின் விழுமத் தானும்
மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும்
அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்

---

1 அருளிய. 2 புனிறுசேர். 3 புல்லிய. 4 புல்கென.
5 குண்மையின். 6 பிரிவின்.

பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும்
காமக் கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்
சென்ற தேஎத்து உழப்புநனி விளக்கி
இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்
அருந்தொழில் முடித்த செம்மற் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்
மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்
கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்
ஏனைய வாயிலோர்[1] எதிரொடு தொகைஇப்
பண்ணமை பகுதிமுப் பதினொரு மூன்றும்
எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன. (ரு)

[தலைவிக்குக் கூற்று நிகழும் இடம்]

145. அவனறி வாற்ற அறியும் ஆகலின்
ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கிற்
பெருமையிற் றிரியா அன்பின் கண்ணும்
கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்
இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்
கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ
நளியின் நீக்கிய இளிவரு நிலையும்
புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்
ககன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி
இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த் தருக்கி
எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும்
தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி

[1] வாயில்.

எங்கையர்க் குரையென இரத்தற் கண்ணும்
செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்
காமக் கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட் டிறுதிக் கண்ணும்
சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி
அறம்புரி உள்ளமொடு தன்வர வறியாமைப்
புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்
தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்
கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்றென
மாதர் சான்ற வகையின் கண்ணும்
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியும்
தன்வயிற் சிறப்பினும் அவன்வயிற் பிரிப்பினும்
இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணும்
காமக் கிழத்தியர் நலம்பா ராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்
கொடுமை [1]ஒழுக்கத்துத் தோழிக் குரியவை
வடுவறு சிறப்பிற் கற்பிற் றிரியாமைக்
காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்
ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்
வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்
கிழவோள் செப்பல் கிழவ தென்ப. (சு)

[1] ஒழுக்கம்.

[தலைவியால் தலைவன்வினைக்கு அச்சமுண்டாகுமிடம்]

146. புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்
திடைச்சுரத் திறைச்சியும் வினையும் சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக் கச்சம் ஆகும். (எ)

[தோழி வாயிலாகப் பிரிவுணர்த்தினும் முற்கூறிய
கூற்று நிகழும் என்பது]

147. தோழியுள் ளுறுத்த வாயில் புகுப்பினும்
ஆவயின் நிகழும் என்மனார் புலவர். (அ)

[தோழிக்குரிய கிளவியாமாறு]

148. பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த
தெறற்கரு மரபிற் சிறப்பின் கண்ணும்
அற்றமழி வுரைப்பினும் அற்றம் இல்லாக்
கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினும்
சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்
அடங்கா ஒழுக்கத் தவன்வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்
பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி
இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்
வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகற்சியும்
சிறந்த புதல்வனைத் [1]தேராது புலம்பினும்
மாணலம் தாவென வகுத்தற் கண்ணும்
பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்
[2]சூள்வயிற் றிறத்தால் சோர்வுகண் டழியினும்
பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெறுதகை இல்லாப் பிழைப்பினும் அவ்வழி

---

[1] நேராது. [2] சூளையத்திறத்தால்.

உறுதகை இல்லாப் புலவியுள் மூழ்கிய
கிழவோள்பால் நின்று கெடுத்தற் கண்ணும்
[1] உணராப் புலவியின் ஊடலுற் றோள்வயின்
உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று
தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும்
அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எளிமைக் காலத் திரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்
காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்
பிரியுங் காலத் தெதிர்நின்று சாற்றிய
மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி எல்லாம்
தோழிக் குரிய என்மனார் புலவர். (கூ)

[காமக்கிழத்தியர் கூற்று நிகழும் இடம்]

149. புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்
இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்
பல்வேறு புதல்வர்க் கண்டுநனி உவப்பினும்
மறையின் வந்த மனையோள் செய்வினை
பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்
காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையிற்
[2] றாய்போற் கழறித் தழீஇய மனைவியைக்
காய்வின் றவன்வயிற் பொருத்தற் கண்ணும்
இன்னகைப் புதல்வனைத் தழீஇயிழை அணிந்து
பின்னர் வந்த வாயிற் கண்ணும்
மனையோள் ஒத்தலிற் றன்னோர் அன்னோர்
மிகையெனக் குறித்த கொள்கைக் கண்ணும்

---
[1] உணர்ப்புவயின் வாரா. [2] றாய்போற் றழீஇக் கழறியம்.

எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும்
கண்ணிய காமக் கிழத்தியர் மேன. (கo)

[தோழி முதலிய வாயில்கட்குரிய கூற்றுக்கள்]

150. கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையிற் கிழவோற் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய. (கக)

[செவிலிக்குரிய கூற்று]

151. கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய ஆகும் என்ப. (கஉ)

[செவிலிகூற்று அறிவர்க்கும் உரித்தென்பது]

152. சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய. (கங)

[அறிவர்க்குரியதோர் மரபு]

153. இடித்துவரை நிறுத்தலும் அவர தாகும்
கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின். (கச)

[தலைவனுக்குப் புலவியும் ஊடலும் நிகழும் இடம்]

154. உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்
புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய. (கரு)

[புலவியினும் ஊடலினும் தோழிகூற்று நிகழும்
என்பது]

155. புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்
சொலத்தகு கிளவி தோழிக் குரிய. (கசு)

[மற்றும் தோழிகூற்று நிகழும் இடம்]

156. பரத்தை மறுத்தல் வேண்டியும் கிழத்தி
மடத்தகு கிழமை உடைமை யானும்
அன்பிலை கொடியை என்றலும் உரியள். (கஎ)

[தலைவிகூற்றில் வேற்றுமைக்கிளவி தோன்றும் இடம்]

157. அவன்குறிப் பறிதல் வேண்டியும் கிழவி
அகமலி ஊடல் அகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே. (கஅ)

[தலைவனுக்குரியதோர் கிளவி]

158. காமக் கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான. (கசு)

[தலைமகட்குரியதோர் கிளவி]

159. அருள்முந் துறுத்த அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே.

[களவினும் கற்பினும் அலர் தோன்றும் என்பது]

160. களவும் கற்பும் அலர்வரை வின்றே. (உக)

[அலரால் விளையும் பயன்]

161. அலரிற் றோன்றும் காமத்து மிகுதி. (உஉ)

[மற்றும் காமத்தின்மிகுதி தோன்றும் இடம்]

162. கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே. (உங)

[வாயில்கட்குரியதோர் மரபு]

163. மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை
தம்முள வாதல் வாயில்கட் கில்லை. (உச)

[மற்றும் வாயில்கட்குரியதோர் மரபு]

164. மனைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக் குறுதி உள்வழி உண்டே. (உரு)

[மற்றும் வாயில்கட் குரியதோர் மரபு]

165. முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்
பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர். (உசு)

[கூத்தர்க்குரிய கிளவி]

166. தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்
பல்லாற் றானும் ஊடலிற் றணித்தலும்
உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்
ஏதுவின் உரைத்தலும் துணியக் காட்டலும்
அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன. (உஎ)

[கூத்தர்க்கும் பாணர்க்கும் உரிய கிளவி]

167. நிலம்பெயர்ந் [1]துரைத்தல் அவ்வநிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய. (உஅ)

[இளையோர்க்குரிய கிளவி]

168. ஆற்றது பண்பும் கருமத்து விளைவும்
ஏவல் முடிவும் வினாவும் செப்பும்
ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்
தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி என்ப. (உகூ)

[இளையோர்க்குரிய தொழில்]

169. உழைக்குறுந் தொழிலும் காப்பும் [2]உயர்ந்தோர்
நடக்கை எல்லாம் அவர்கட் படுமே. (௩0)

---

[1] துறைதல். [2] உயர்ந்தோர்க்கு.

[தலைவனுக்குரியதோர் மரபு]

170. பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்
இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்
இறந்தது நினைஇக் கிழவோன் ஆங்கட்
கலங்கலும் உரியன் என்மனார் புலவர். (௩௧)

[தலைவிக்குரியதோர் இயல்பு]

171. தாய்போற் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலை யான. (௩௨)

[தலைவி காமக்கிழத்தியரை உயர்த்தற்குக் காரணம்]

172. அவன்சோர்பு காத்தல் கடனெனப் படுதலின்
மகன்தாய் உயர்பும் தன்னுயர் பாகும்
செல்வன் பணிமொழி இயல்பாக லான. (௩௩)

[தலைவன் தலைவியொடு பாசறைக்குச் செல்லான் என்பது]

173. எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார். ()

[பாசறைக்கண் புணர்ச்சிக்குரிய மகளிர்]

174. புறத்தோ ராங்கட் [1]புணர்வ தாகும். (௩௫)

[பார்ப்பார்க்குரிய கிளவி]

175. காமநிலை உரைத்தலும் தேர்நிலை உரைத்தலும்
கிழவோன் குறிப்பினை [2]எடுத்துக் கூறலும்
ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய. (௩௬)

[1] புரைவதென்ப. [2] எடுத்தனர் மொழிதலும்.

[வாயில்கட்கு உரியதோர் மரபு]

176. எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்
புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப. (௩௭)

[மேற்கூறியதற்கோர் மாறுபாடு]

177. அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றிற்
சிறைப்புறங் குறித்தன் றென்மனார் புலவர். (௩௮)

[தலைவிக்குரியதோர் மரபு]

178. தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்
எத்திறத் தானும் கிழத்திக் கில்லை
முற்பட வகுத்த இரண்டலங் கடையே. (௩௯)

[தலைவற்குரியதோர் மரபு]

179. கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின் உரிய என்ப. (௪0)

[பாங்கற்குரியதோர் மரபு]

180. மொழியெதிர் மொழிதல் பாங்கற் குரித்தே. (௪௧)

[மேற்கூறியதற்கோர் மாறுபாடு]

181. குறித்தெதிர் மொழிதல் அஃகித் தோன்றும். (௪௨)

[தலைவற்குரியதோர் மரபு]

182. துன்புறு பொழுதினும் எல்லாம் கிழவன்
வன்புறுத் தல்லது சேறல் இல்லை. (௪௩)

[தலைவன் பிரிவு தவிர்தற்குக் காரணம்]

183. செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்பூறை குறித்தல் தவிர்ச்சி ஆகும். (௪௪)

[தலைவன் தலைவியர்பொருட்டுப் புலம்பற்காகா இடம்]

184. கிழவி நிலையே வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும். (சரு)

[பூத்தபின் ஈராறு நாளும் தலைவன் தலைவியைப் பிரியான் என்பது]

185. பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான. (சசு)

[ஓதற்பிரிவுக்குரிய காலவரையறை]

186. வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது. (சஎ)

[தூது, நாடுகாவல் முதலிய பிரிவுக்குரிய காலவரையறை]

187. வேந்துறு தொழிலே யாண்டின தகமே. (சஅ)

[மேற்கூறிய காலமே பொருள்வயிற் பிரிவுக்கும் உரித்து என்பது]

188. ஏனைப் பிரிவும் அவ்வியல் நிலையும். (சகூ)

[தலைவனுதியோர்க்குரிய புனல்விளையாட்டு முதலியன]

189. யாறும் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப. (ருo)

[தலைவனும் தலைவியும் துறவறங்காத்தற்குரிய காலம்]

190. காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே. (ருக)

[வாயில்களாவார்]

191. தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப. (நஉ)

[வினைமுற்றி மீண்ட தலைவன் இடைநெறியில்
தங்கான் என்பது]

192. வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கிற் றவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமை யான. (நங)

5. பொருளியல்

[தொடர்மொழிக்கண் பொருள் இயையுமாறு]

193. இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே
அசைதிரிந் [1]திசையா என்மனார் புலவர். (க)

[தலைமக்கள் இருவரையும்பற்றிப் பொருள் நிகழுமாறு]

194. நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சமொடு புணர்த்தும்
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தம்போலச் சேர்த்தியும்

1 இயலா.

அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரிய வாக
உவம வாயிற் படுத்தலும் [1]உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி. (உ)

[காமம் இடையீடுபட்டுழி வருவதோர் வேறுபாடு]

195. கனவும் உரித்தால் அவ்விடத் தான. (ங)

[மேற்கூறிய வேறுபாடு நற்றாய்க்கும் உரித்தென்பது]

196. தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின். (ச)

[ஒரு கூற்றுக்கிளவிகள் தலைவி, தோழி, நற்றாய்,
செவிலியாகிய நால்வர்க்கும் உரித்தென்பது]

197. பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே
நட்பின் நடக்கை ஆங்கலங் கடையே. (ரு)

[தலைவி முதலாயினோர்க்குரிய குணங்கள்]

198. உயிரும் நாணும் மடப்பமும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய. (சா)

[தலைவிக்குரியதோர் பொருண்மை]

199. வண்ணம் [2]திரிந்து புலம்புறு காலை
உணர்ந்தன போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே. (எ)

[மனைக்கிழத்தியாவார்க் குரியதோர் மரபு]

200. உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
என்னுற் றனகொல் இவையெனின் அல்லதை
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை. (அ)

---

[1] உவமமோ டொன்றிடத். [2] பசந்து.

[மேற்கூறியதற்கோர் மாடபோடு]

201. ஒருசிறை நெஞ்சமொ டுசாவுங் காலை
உரிய தாகலும் உண்டென மொழிப. (கூ)

[தலைவி மடன் அழிய நிற்கும் இடம்]

202. தன்வயிற் கரத்தலும் அவன்வயின் வேட்டலும்
அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்
மடனொடு நிற்றல் கடனென மொழிப. (௧௦)

[தோழி அறத்தொடு நிற்றற்குரிய காலம்]

203. அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப. (௧௧)

[தோழி அறத்தொடு நிற்குமாறு]

204. எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பா
டுண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர். (௧௨)

[தோழி முதலாயினோர் தலைவியின் உள்ளக்கிடையை
அறியுமாறு]

205. உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்
அப்பொருள் வேட்கைக் கிழவியின் உணர்ப. (௧௩)

[மறை புலப்படாவாறு தடுத்து நிற்கும் பெண்டிர்க்குரிய
குணங்கள்]

206. செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான. (௧௪)

[வரைதல் காரணமாகத் தோழிமாட்டு நிகழும் கூற்றுக்கள்]

207. பொழுதும் ஆறும் காப்புமென் றிவற்றின்
வழுவி னாகிய குற்றம் காட்டலும்

தன்னை அழிதலும் அவணூ றஞ்சலும்
இரவினும் பகலினும் நீவர வென்றலும்
கிழவோன் றன்னை வாரல் என்றலும்
நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்
புரைபட வந்த அன்னவை பிறவும்
வரைதல் வேட்கைப் பொருள என்ப. (கரு)

[களவுநீட்டித்த விடத்துத் தலைவிக்கும் தோழிக்கும் உரியதோர் மரபு]

208. வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்
மரீஇய மருங்கின் உரித்தென மொழிப. (கசு)

[களவுக்காலத்துத் தலைவற்குரியதோர் மரபு]

209. தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப. (கஎ)

[சொல்வேறுபட்டுப் பொருளுணர்த்துமாறு]

210. உண்டற் குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே. (கஅ)

[களவுக்காலத்துத் தலைவற்குரியதோர் இயல்பு].

211. பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே
காப்புக்கைம் மிகுதல் உண்மை யான. (ககூ)

[மற்றும் தலைவற்குரியதோர் மரபு]

212. அன்பே அறனே இன்பம் நாணொடு
துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்
ஒன்றும் வேண்டா காப்பின் உள்ளே. (உ0)

[மற்றும் தலைவற்குரியதோர் மரபு]

213. சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே. (உக)

[செய்யுட் காவதோர் மரபு]

214. உயர்ந்தோர் [1] கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்குவழிப் [2] படுதல் செய்யுட்குக் கடனே. (உஉ)

[செய்யுட்கண் தழுவலாகா வழக்கு]

215. அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப. (உங)

[செய்யுட்கண் நாணழியவரும் பொருண்மை புணர்க்கப்
படா என்பது]

216. மிக்க பொருளினுட் பொருள்வகை புணர்க்க
நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே. (உச)

[முறைப்பெயர்பற்றி வரும் சொல்வழுவமைதி]

[சொல்

217. முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்
நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே. (உரு)

[பிறருரிமையைத் தன்னுரிமையெனக் கூறுதற்காவ
தோர் வழுவமைதி]

218. தாயத்தின் அடையா ஈயச் செல்லா
வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா
எம்மென வரூஉம் கிழமைத் தோற்றம்
அல்லா வாயினும் புல்லுவ உளவே. (உசு)

[அகப்பொருட் குரியதோர் வழக்கு]

219. ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப. (உஎ)

---

[1] கிளவியும். [2] படுத்தல்.

[மனம்பொருந்திய வழியே இன்பம் பிறக்கும் என்பது]

220. எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் ஏவற் றுகும். (உஅ)

[பரத்தைவாயிலாதற் குரியாரும் அதற்குரிய நிலமும்]

221. பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர். (உகூ)

[களவின்கண் தலைவிக்குரியதோர் திறன்]

222. ஒருதலை உரிமை [1]வேண்டினும் மகடூஉப்
பிரிதல் அச்சம் உண்மை [2]யாகலின்
அம்பலும் அலரும் களவுவெளிப் படுக்குமென்
றஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்
நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்
போக்கும் வரைவும் மனைவிக்கட் டோன்றும். (ஙo)

[தலைவிக்கும் தோழிக்கும் உரியதோர் திறன்]

223. வருத்த மிகுதி சுட்டுங் காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம். (ஙக)

[கற்பினுள் தலைவற்கும் தலைவிக்கும் உரியதோர் திறன்]

224. மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய. (ஙஉ)

[கற்பின்கண் தலைவற்கு உரியதோர் மரபு]

225. நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்
புகழ்தகை வரையார் கற்பின் உள்ளே. (ஙங)

---

[1] வேண்டியும். [2] யானும்.

[இறைச்சிப்பொருள் ஆமாறு]

226. இறைச்சி தானே [1]உரிப்புறத் ததுவே. (௩௪)

[இறைச்சிப் பொருளில் பிறக்கும் மற்றோர் பொருள்]

227. இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கிற் றெரியு மோர்க்கே. (௩௫)

[இறைச்சியிற் சுட்டிக் கூறப்படுவதோர் பொருள்]

228. அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே. (௩௬)

[தலைவன் பாராட்டினால் தலைவி உணரும் பொருண்மை]

229. செய்பொருள் அச்சமும் வினைவயிற் பிரிவும்
மெய்பெற [2]உணரும் கிழவி பாராட்டே. (௩௭)

[தலைமகட்கு உரியதோர் இயல்பு]

230. கற்புவழிப் பட்டவள் [3]பரத்தைமை ஏத்தினும்
உள்ளத் தூடல் உண்டென மொழிப. (௩௮)

[மற்றும் தலைவிக்கு உரியதோர் இயல்பு]

231. கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள். (௩௯)

[மற்றும் தலைவிக்கு உரியதோர் இயல்பு]

232. தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்
மெய்ம்மை யாக அவர்வயின் உணர்ந்தும்
தலைத்தாட் கழறறம் எதிர்ப்பொழு தின்றே
மலிதலும் ஊடலும் அவையலங் கடையே. (௪௰)

---
[1] பொருட்புறத். [2] உணர்த்தும். [3] ப[illegible]

[தலைவன் குறித்த பருவம் வருதற்கு முன்பே பருவங் கடந்ததாகத் தலைவி வருந்தற்குக் காரணம்]

233. பொழுது தலைவைத்த கையறு காலை
இறந்த போலக் கிளக்குங் கிளவி
மடனே வருத்தம் மருட்கை மிகுதியோ
டவைநாற் பொருட்கண் நிகழும் என்ப. (சக)

[களவுக்காலத்துத் தோழிக்குரியதோர் திறன்]

234. இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்
வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்
நல்வகை யுடைய நயத்திற் கூறியும்
பல்வகை யானும் படைக்கவும் பெறுமே. (சஉ)

[தலைவன் தலைவியர் கூற்றிற்குரியதோர் மரபு]

235. உயர்மொழிக்[1] கிளவி உறழுங் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே. (சங)

[தோழிக்கு உரியதோர் மரபு]

236. உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்
உரிய தாகும் தோழிகண் உரனே. (சச)

[மற்றும் தோழிக்கு உரியதோர் கிளவி]

237. உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே. (சரு)

[வாயில்கட்கு உரியதோர் மரபு]

238. வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின் றுரிய தத்தம் கூற்றே. (சசு)

1 குரிய.

[உள்ளுறைபொருள் ஆமாறு]

239. உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே. (சஎ)

[உள்ளுறைபொருள்பற்றி வருவதோர் பொருள்]

240. அந்தமில் சிறப்பின் [1] ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே. (சஅ)

[மற்றும் உள்ளுறைபொருள்பற்றித்தோன்றும் பொருள்]

241. மங்கல மொழியும் [2] அவையல் மொழியும்
மாறில் ஆண்மையிற் சொல்லிய மொழியும்
[3] கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப. (சகூ)

[மெய்ப்பாட்டியலுள் தலைமக்கட்காகா எனக் கூறிய
வற்றுக்கோர் மாறுபாடு]

242. சினனே பேதைமை நிம்பிரி நல்குர
வனை நால் வகையும் சிறப்பொடு வருமே. (ரு0)

[முறைப்பெயர்க்கண் வருவதோர் வழுவமைதி]

243. அன்னை என்னை என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்
தோன்றா மரபின என்மனார் புலவர். (ருக)

[நெஞ்சினால் உணரப்படும் பொருள்கள்]

244. ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும் என்றா
சாயலும் நாணும் மடனும் என்றா
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்

1 ஆக்கிய. 2 வைஇய. 3 கூறியல்.

காவயின் வரூஉம் கிளவி எல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப. (ருஉ)

[மேற்கூறியபொருள் எக்காலத்தும் எங்கும் உள்ளன
என்பது]

245. இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்
அவையில் காலம் இன்மை யான. (ருங)

6. மெய்ப்பாட்டியல்

[மெய்ப்பாட்டின்வகை பதினாறு என்பது]

246. பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப. (க)

[மேற்கூறியவை, 'நகை' முதலிய எட்டனுள் அடங்கும்
என்பது]

247. நாலிரண் டாகும் பாலுமா ருண்டே. (உ)

[மெய்ப்பாடு ஆமாறு]

248. நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப. (ங)

['நகை' என்னும் சுவைக்குரிய நிலைக்களன்]

249. எள்ளல் இளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப. (ச)

['அழுகை' என்னும் சுவைக்குரிய நிலைக்களம்]

250. இளிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே. (ரு)

['இளிவரல்' என்னும் சுவைக்குரிய நிலைக்களம்]

251. மூப்பே பிணியே வருத்தம் மென்மையோ
டியாப்புற வந்த இளிவரல் நான்கே. (சு)

['மருட்கை' என்னும் சுவைக்குரிய நிலைக்களம்]

252. புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே. (எ)

['அச்சம்' என்னும் சுவைக்குரிய நிலைக்களம்]

253. அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே. (அ)

['பெருமிதம்' என்னும் சுவைக்குரிய நிலைக்களம்]

254. கல்வி தறுகண் [1] புகழ்மை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே. (கூ)

['வெகுளி' என்னும் சுவைக்குரிய நிலைக்களம்]

255. உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே. (க0)

['உவகை' என்னும் சுவைக்குரிய நிலைக்களம்]

256. செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே. (கக)

---

[1] இசைமை.

[மற்றும் மெய்ப்பாட்டிற்குரிய நிலைக்களங்கள்]

257. [1] ஆங்கவை
ஒருபால் ஆக ஒருபா லாக
உடைமை இன்புறல் நடுநிலை அருள்
தன்மை அடக்கம் வரைவன் பெறாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெறாஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ
இவையும் உளவே அவையலங் கடையே. (கஉ)

[அகத்திணைக்கே உரிய மெய்ப்பாட்டின் பகுதி ஆறனுள்
முதற் பகுதி]

258. புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப. (கங)

[இரண்டாம் பகுதி]

259. கூழை விரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலோ
டூழி நான்கே இரண்டென மொழிப. (கச)

[மூன்றும் பகுதி]

260. அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப. (கரு)

---
1 'ஆங்கவை ஒருபா லாக ஒருபால், உடைமை'

[நான்காம் பகுதி]

261. பாராட் டெடுத்தல் மடந்தப உரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப. (கசு)

[ஐந்தாம் பகுதி]

262. தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப. (கஎ)

[ஆறும் பகுதி]

263. புறஞ்செயச் சிதைத்தல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையற வுரைத்தல்
[1] விளம்பிய நான்கே ஆறென மொழிப. (கஅ)

[மேற்கூறியன காம ஒழுக்கத்துக்கு நிமித்தமாம் என்பது]

264. அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்தம் என்ப. (கசு)

[மேற்கூறியன நிமித்தமாகா இடம்]

265. வினையுயிர் மெலிவிடத் தின்மையும் உரித்தே. (உ0)

[மேற்கூறியன கைக்கிளைக்கும் உரிய என்பது]

266. அவையும் உளவே அவையலங் கடையே. (உக)

[பெருந்திணைக்குரிய மெய்ப்பாடு]

267. இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்

[1] புலம்பிய.

பசியட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்டுயில் மறுத்தல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடல் மெய்யே என்றல்
ஐயஞ் செய்தல் அவன்றமர் உவத்தல்
அறனளித் துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்
எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்
ஒப்புவழி உவத்தல் உறுபெயர் கேட்டல்
நலத்தக நாடின் கலக்கமும் அதுவே. (உஉ)

[மனனழியாதவழி நிகழும் மெய்ப்பாடு]

268. முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை இன்மையென்
றுயிரு நான்கே அழிவில் கூட்டம். (உங)

[மேற்கூறிய அழிவில் கூட்டத்திற்குரிய பொருண்மை]

269. தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்
இல்லது காய்தல் உள்ள துவர்த்தல்
புணர்ந்துழி உண்மை பொழுதுமறுப் [1] பாதல்
அருள்மிக உடைமை [2] அன்புமிக நிற்றல்
பிரிவாற் றாமை மறைந்தவை [3] உரைத்த
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்தும் செப்பிய பொருளே. (உச)

[தலைவற்கும் தலைவிக்கும் உரிய ஒப்புமைப் பாகுபாடு]

270. பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்

---

[1] பாக்கம். [2] அன்புதொக. [3] உரைத்தல்.

நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே. (உரு)

[தலைமகட்காகாத குணம்]

271. நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமை யொடு [1]குடி
இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை
என்றிவை இன்மை என்மனார் புலவர். (உசு)

[மேற்கூறிய மெய்ப்பாடெல்லாம் உணர்ச்சித்திறனுடை
யார்க்கே புலனாகும் என்பது]

272. கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.

7. உவமவியல்

[உவமையின் பாகுபாடு]

273. வினை பயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம். (க)

[உவமை விரவிவரும் என்பது]

274. விரவியும் வரூஉம் மரபின என்ப. (உ)

[உயர்ந்த பொருளே உவமைக்குரித்தாகும் என்பது]

275. உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை. (ங)

[உவமை தனக்குப் பொருளாகப்பற்றிப் பிறக்கும் இடம்]

276. சிறப்பே நலனே காதல் வலியோ
டந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப. (ச)

[1] குடிமை

[உவமை இழிந்தபொருளையும் பற்றிப் பிறக்கும் என்பது]

277. கிழக்கிடும் பொருளோ டைந்தும் ஆகும். (ரு)

[உவமை, முதலும் சினையும் பற்றி வருமாறு]

278. முதலும் சினையுமென் றாயிரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய. (சா)

[உவம உருபின்றியும் உவமை வரும் என்பது]

279. சுட்டிக் கூறா உவம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே.

[உவமைக்கு உரியதோர் மரபு]

280. உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும். (அ)

[உவமைக்கண் வருவதோர் வேறுபாடு]

281. பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவமம் ஆகும். (கூ)

[மற்றும் உவமைக்கு உரியதோர் மரபு]

282. பெருமையும் சிறுமையும் சிறப்பிற் றீராக்
குறிப்பின் வரூஉம் நெறிப்பா டுடைய. (கo)

[உவம உருபுகள்]

283. அவைதாம்
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை எனாஅ

எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஒடப் புரைய என்றவை எனாஅ
ஆறா றவையும் அன்ன பிறவும்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே. (கக)

[வினையுவம உருபுகள்]

284. அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம். (கஉ)

['அன்ன' என்னும் உவமவுருபிற்குரியதோர் வேறுபாடு]

285. அன்னவென் கிளவி பிறவொடும் சிவணும். (கங)

[பயனுவம உருபுகள்]

286. எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங் கெட்டே பயனிலை உவமம். (கச)

[மெய்யுவம உருபுகள்]

287. கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்பவென்
றப்பால் எட்டே மெய்ப்பால் உவமம். (கரு)

[உரு வுவம உருபுகள்]

288. போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தவென்
றொத்துவரு கிளவி உருவின் உவமம். (கசு)

[மேற்கூறிய உருபெல்லாம் வரலாற்று முறையாற் பொருள் தோன்ற நிற்கும் என்பது]

289. தத்தம் மரபிற் றோன்றுமன் பொருளே. (கஎ)

[உவமையின் வகை நான்காதலே யன்றி எட்டாதலும் உரித்து என்பது]

290. நாலிரண் டாகும் பாலுமா ருண்டே. (கஅ)

[எட்டு மெய்ப்பாட்டையும் பற்றி உவமை தோன்றுமாறு]

291. பெருமையும் சிறுமையும் மெய்ப்பா டெட்டன்
வழிமருங் கறியத் தோன்றும் என்ப. (கக)

[உவமிக்கப்படும்பொருள் கூறப்படாவிடத்து உவமைப் பொருளே அதனை உணர்த்தும் என்பது]

292. உவமப் பொருளின் உற்ற துணரும்
தெளிமருங் குளவே திறத்திய லான. (உ0)

[மேற்கூறிய பொருண்மையை உணருமாறு]

293. உவமப் பொருளை உணருங் காலை
மரீஇய மரபின் வழக்கொடு [1] வருமே. (உக)

[உவமையும் உவமிக்கப்படும் பொருளும் புணர்ந்து வருமாறு]

294. இரட்டைக் கிளவி இரட்டை வழித்தே. (உஉ)

---

[1] படுமே.

[உவமைக்கண் உணரலாவதோர் பொருள்]

295. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே. ()

[உவமப்போலி ஐந்தென்பது]

296. உவமப் போலி ஐந்தென மொழிப. (உச)

[உவமப்போலி பிறக்குமிடம்]

297. தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉம் [1] திறத்த என்ப. (உரு)

[தலைவி கூற்றிற்குரிய உவமைப் பொருள்]

298. கிழவி சொல்லின் அவளறி கிளவி. (உசா)

[தோழி கூற்றிற்குரிய உவமைப் பொருள்]

299. தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது. (உஎ)

[தலைவன் கூற்றிற்குரிய உவமைப் பொருள்]

300. கிழவோற் காயின் உரனொடு கிளக்கும். (உஅ)

[நற்றாய் முதலாயினர் கூற்றிற்குரிய உவமைப் பொருள்]

301. ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே. (உகூ)

[உவமைக்கண் தோன்றும் சில கூற்றுக்கள்]

302. இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவம மருங்கிற் றோன்றும் என்ப. (௩௦)

[தலைவி உவமை கூறற்குரிய இடம்.]

303. கிழவோட் குவமை ஈரிடத் துரித்தே. (௩௧)

---

[1] திறத்தியல்.

[தலைவன் உவமை கூறற்குரிய இடம்]

304. கிழவோற் காயின் இடம்வரை வின்றே. (௩௨)

[தோழி முதலாயினர் உவமை கூறற்குரிய இடம்.]

305. தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
கூறுதற் குரியர் கொள்வழி யான. (௩௩)

[நெறிபிறழ்ந்து வரும் உவமைகளை ஏற்கும்வழி அமைக்குமாறு]

306. வேறுபட வந்த உவமத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல். (௩௪)

[உவமையை உவமிக்கப்படும் பொருளின் நீக்கிக் கூறுமாறு]

307. ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே. (௩௫)

[உவமத்தன்மையும் உவமையாகக் கூறப்படுமாறு]

308. உவமத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான. (௩௬)

[ஐய உவமம் ஆமாறு]

309. [1]தடுமாறு வரலும் கடிவரை யின்றே. (௩௭)

[உவமைக்குவமையாக அடுக்கிக் கூறப்படா இடம்]

310. அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே
நிரனிறுத் தமைத்த நிரனிறை சுண்ணம்
வரைநிலை வைத்த மூன்றலங் கடையே. (௩௮)

1 தடுமாறுவமம்.

8. செய்யுளியல்

[செய்யுட்காகும் உறுப்பு]

311. மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை எனாஅ
நோக்கே பாவே அளவியல் எனாஅத்
திணையே கைகோள் கூற்றுவகை எனாஅக்
கேட்போர் களனே காலவகை எனாஅப்
பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ
மாட்டே வண்ணமொ டியாப்பியல் வகையின்
ஆறுதலை யிட்ட அந்நா லைந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே. (க)

[மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்]

312. அவற்றுள்
மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தன்ன என்மனார் புலவர். (உ)

[அசையாமாறு]

313. குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசிற் பெயரே. (ங)

[அசைக்குரியதோர் வேறுபாடு]

314. இருவகை உகரமொ டியைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப
குறிலிணை உகரம் அல்வழி யான. (௪)

[இயலசையும் உரியசையும்]

315. இயலசை முதலிரண் [1]டேனை உரியசை. (௫)

[தனிக்குறில் அசையாகா இடம்]

316. தனிக்குறில் முதலசை மொழிசிதைத் தாகாது. (௬)

[குற்றியலிகரம் அலகுபெறு தென்பது]

317. ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம். (௭)

[முற்றியலுகரத்திற்குரிய வேறுபாடு]

318. முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும். (௮)

[உகரமிரண்டிற்கும் உரியதோர் வேறுபாடு]

319. குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
[2]ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே. (௯)

[வகையுளி ஆமாறு]

320. அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே. (௧0)

[சீர் ஆமாறு]

321. ஈரசை கொண்டும் மூவசை [3]புணர்த்தும்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே. (௧௧)

---

1 டேனைய. 2 ஒற்றொடுக். 3 புணர்ந்தும்.

[ஈரசைச்சீர்ப் பாகுபாடு]

322. இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர். (கஉ)

[ஆசிரிய உரிச்சீர்க்கு உரியதோர் பகுதி]

323. முன்னிரை [1] வரினும் அன்ன வாகும். (கஙு)

[இயற்சீர்க்கு உரியதோர் பகுதி]

324. நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால. (கச)

[மற்றும் இயற்சீர்க்கு உரிய பகுதி]

325. இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே
நிரையசை இயல வாகும் என்ப. (கரு)

[உயிரளபெடை அசையாமாறு]

326. அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே. (கசு)

[ஒற்றளபெடை அசையாமாறு]

327. ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப. (கஎ)

[வெண்பா உரிச்சீர் ஆமாறு]

328. இயற்சீர் இறுதிமுன் நேரவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப. (கஅ)

[வஞ்சி உரிச்சீர் ஆமாறு]

329. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீர் அல்லா மூவசை யான. (ககூ)

---

1 உறினும்.

[வஞ்சி உரிச்சீர் வஞ்சிப்பாவிற்கே உரித்தென்பது]

330. தன்பா அல்வழித் தானடை [1] வின்றே (உ0)

[மற்றைச் சீர்களும் வஞ்சிக்கு உரித்தென்பது]

331. வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய. (உக)

[வெண்பாவிற்கு உரியதோர் மரபு]

332. வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்
இன்பா நேரடிக் கொருங்குநிலை இலவே. (உஉ)

[கலிப்பாவிற்கு உரியதோர் மரபு]

333. கலித்தளை மருங்கிற் கடியவும் [2] பெறாஅ. (உங)

[மற்றும் கலிப்பாவிற்கு உரியதோர் மரபு]

334. கலித்தளை அடிவயின் நேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே. (உச)

[வஞ்சிப்பாவிற்கு உரியதோர் மரபு]

335. வஞ்சி மருங்கினும் இறுதி நில்லா. (உரு)

[ஓரசைச் சொல் சீராமாறு]

336. இசைநிலை நிறைய நிற்குவ தாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே. (உசு)

[அசைச்சீர் செய்யுட்கண் இடம்பெறுமாறு]

337. இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே
தளைவகை சிதையாத் தன்மை யான. (உஎ)

---

1 யின்றே. 2 படாஅ.

[வெண்சீர் பற்றிவரும் கலித்தளை]

338. வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே. (௨௮)

[வெண்சீர் ஆசிரியப்பாவினுள் இடம் பெறுமாறு]

339. இன்சீர் இயைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே. (௨௯)

[வஞ்சி உரிச்சீரும் ஆசிரியப் பாவினுள் இடம் பெறும் என்பது]

340. அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுதல் உடைய [1] ஓரொரு வழியே. (௩௦)

[அடியாமாறு]

341. நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே. (௩௧)

[தளையும் தொடையும் அடியின்கண் பயிலும் என்பது]

342. அடிஉள் ளனவே தளையொடு தொடையே. (௩௨)

[தளையும் தொடையும் நாற்சீரடிக்கே உரிய என்பது]

343. அடியிறந்து வருதல் இல்லென மொழிப. (௩௩)

[பாட்டாமாறு]

344. அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே. (௩௪)

[குறளடிக்குரிய எழுத்து வரையறை]

345. நாலெழுத் தாதி ஆக ஆறெழுத்
தேறிய நிலத்தே குறளடி என்ப. (௩௫)

---

1 ஓரோர்.

[சிந்தடிக்கு உரிய எழுத்து வரையறை]

346. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்றம் [1] அல்வழி யான. (௩௫)

[நேரடிக்கு உரிய எழுத்து வரையறை]

347. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தொற்றலங் கடையே. (௩௭)

[நெடிலடிக்கு உரிய எழுத்து வரையறை]

348. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப. (௩௮)

[கழிநெடிலடிக்கு உரிய எழுத்து வரையறை]

349. மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலும் [2] இயல்பென மொழிப. (௩௯)

[சீர்க்கு உரிய எழுத்து வரையறை]

350. சீர்நிலை தானே ஐந்தெழுத் திறவாது
நேர்நிரை வஞ்சிக் காறும் ஆகும். (௪0)

[சீர்க்கு உரியதோர் மரபு]

351. எழுத்தள வெஞ்சினும் சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப. (௪௧)

[எண்ணப்படா எழுத்துக்கள்]

352. உயிரில் லெழுத்தும் எண்ணப் படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான. (௪௨)

---

[1] அவ்வழி. [2] இவட்பெறும் என்ப.

[இருசீரடி வஞ்சிப் பாவிற்கு உரித்தென்பது]

353. வஞ்சி அடியே இருசீர்த் தாகும். (௩௫௩)

[வஞ்சியுரிச்சீர் மூன்றெழுத்திற்குக் குறையாதென்பது]

354. தன்சீர் எழுத்தின் சிறுமை மூன்றே. (௩௫௪)

[வஞ்சிப்பா முச்சீரடியும் பெறும் என்பது]

355. முச்சீ ரானும் வருமிடன் உடைத்தே. (௩௫௫)

[வஞ்சியடிகட்குரிய 'கூன்' அசையாகும் என்பது]

356. அசைகூன் ஆகும் அவ்வயி னான. (௩௫௬)

[நேரடிக்குரிய 'கூன்' சீராகும் என்பது]

357. சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே. (௩௫௭)

[மேற்கூறிய குறளடி முதலிய ஐவகை அடிகளும் விகற்பத்தால் அறுநூற்றிருபத்தைந்து ஆமாறு]

358. ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் [1]நிலத்தும்
எழுபது [2]வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே. (௩௫௮)

[மேற்கூறியவை விரிப்பின் வரம்பிலவாம் என்பது]

359. ஆங்ஙனம் விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை. (௩௫௯)

[ஐவகை யடியும் ஆசிரியப் பாவினுள் பயிலும் என்பது]

360. ஐவகை அடியும் ஆசிரியக் குரிய. (௩௬௦)

---

1 நிலத்த, 2 வகைமையின்.

[ஐவகை யடியும் ஒரு பாட்டினுள் விரவியும் வரும் என்பது]

361. விராஅய் வரினும் ஒரூஉநிலை இல்லே. (ருக)

[அடியின்கண் ஓசைவேறுபாடு உணர்த்தும் தளையாமாறு]

362. தன்சீர் வகையினும் தளைநிலை வகையினும்
இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய
தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா. (ருஉ)

[ஆசிரியத் தளையாமாறு]

363. சீரியை மருங்கின் ஓரசை ஒப்பின்
ஆசிரியத் தளையென் றறியல் வேண்டும். (ருங)

[வஞ்சி உரிச்சீர் உறழப்பெறா இடம்]

364. குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை இலவே வஞ்சிக் கென்ப. (ருச)

[வெண்பாவிற்குரிய அடியும் தளையும்]

365. அளவும் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை ஒன்றாத் தன்மை யான. (ருரு)

[கலிப்பாவிற்குரிய அடி]

366. அளவடி மிகுதி உளப்படத் தோன்றி
இருநெடில் அடியும் கலியிற் குரிய. (ருசா)

[கலித்தளை ஆமாறு]

367. நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்
வரைநிலை யின்றே அவ்வடிக் கென்ப. (ருஎ)

[மற்றும் கலிக்குரியதோர் தளை]

368. விராஅய தளையும் ஒரூஉநிலை யின்றே. (ருஅ)

[வெண்பாஅடி ஆசிரியப்பாவினுள் மயங்குமாறு]

369. இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே. (௩௬௯)

[ஐஞ்சீரடியும் பயின்று வருமாறு]

370. வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப. (௩௭௦)

[ஆசிரியப்பாவினுள் அறுசீரடியும் வருமாறு]

371. அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே. (௩௭௧)

[எழுசீரடி முடுகியலின்கண் பயின்று வருமாறு]

372. எழுசீர் அடியே முடுகியல் நடக்கும். (௩௭௨)

[ஐஞ்சீரடியும் அறுசீரடியும் முடுகியலின்கண் பயின்று
வரும் என்பது]

373. முடுகியல் வரையார் முதலீ ரடிக்கும். (௩௭௩)

[முடுகியலுக்கு உரிய அடிகள் மூன்றும் ஆசிரியப்
பாவினும் வெண்பாவினும் வரப்பெறு என்பது]

374. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை அடியும் முன்னுதல் இலவே. (௩௭௪)

[ஆசிரியப் பாவிற்கு உரியதோர் மரபு]

375. ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கிற்
றோற்றம் முச்சீர்த் தாகும் என்ப. (௩௭௫)

[மூச்சீரடி ஆசிரியப்பாவினுள் இடையிலும் வரப்பெறும் என்பது]

376. இடையும் வரையார் தொடையுணர் வோரே. (சுசு)

[கலிப்பாவினுள் முச்சீரடி பயின்று வருமாறு]

377. முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும். (சுஎ)

[வஞ்சிப்பாவின் ஈற்றடி இயல்பு]

378. வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே. (சுஅ)

[வெண்பா ஈற்றடியின் அளவு]

379. வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்
அசைச்சீர்த் தாகும் [1] அவ்வழி யான. (சுகூ)

[வெண்பாவின் இறுதியில் நேரசைச்சீர் பயிலுமாறு]

380. நேரீற் றியற்சீர் நிரையும் நிரைபும்
சீரேற் றிறூஉம் இயற்கைய என்ப. (எ0)

[வெண்பாவின் இறுதியில் நிரையசைச்சீர் பயிலுமாறு]

381. நிரையவண் நிற்பின் நேரும் நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர். (எக)

[கலிப்பா இறுதியடியின் அளவு]

382. எழுசீர் இறுதி ஆசிரியம் கலியே. (எஉ)

[கலிப்பாவின் ஈற்றடி வெண்பாவின் முடிவையும் பெறும் என்பது]

383. வெண்பா இயலினும் பண்புற முடியும். (எ௩)

---

1 அவ்வயி னான.

[யாப்பு ஆமாறு]

384. எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர். (எச)

[யாப்பிற்குரிய எழுநிலங்கள்]

385. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர். (எரு)

[சொன்மரபு ஆமாறு]

386. மரபே தானும்
நாற்சொல் இயலான் யாப்புவழிப் [1] பட்டன்று. ()

[ஆசிரியப்பாவிற்கு உரிய ஓசை]

387. அகவல் என்ப தாசிரி யம்மே. (எஎ)

[வெண்பாவிற்கு உரிய ஓசை]

388. [2] அஃதன் றென்ப வெண்பா யாப்பே. (எஅ)

[கலிப்பாவிற்கு உரிய ஓசை]

389. துள்ளல் ஓசை கலியென மொழிப. (எகூ)

[வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை]

390. தூங்கல் ஓசை வஞ்சி ஆகும். (அ0)

---

[1] பட்டன. [2] அஃதான்.

[மருட்பாவிற்கு உரிய ஓசை]

391. மருட்பா ஏனை இருசார் அல்லது
தானிது என்னும் [1] தன்மை இன்றே. (அக)

[பாக்கள் எல்லாவற்றிற்கும் உரியதோர் மரபு]

392. [2] அவ்வியல் பல்லது பட்டாங்குக் கிளவார். (அஉ)

['தூக்கு' என்பதன் இலக்கணம் இதுகாறும் கூறிய
வற்றுள் அடங்கும் என்பது]

393. தூக்கியல் வகையே ஆங்கென மொழிப. (அங)

[தொடையின் வகை நான்கு என்பது]

394. மோனை எதுகை முரணே இயைபென
நானெறி மரபின தொடைவகை என்ப. (அச)

[அளபெடையோடு ஐந்தாகும் என்பது]

395. அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும். (அரு)

[மற்றும் உளதாகும் தொடை வகை]

396. பொழிப்பும் ஒரூஉவும் செந்தொடை மரபும்
அமைத்தனர் தெரியின் அவையுமாருளவே. (அசா)

[நிரனிறைத் தொடையும் இரட்டைத் தொடையும்
மேற்கூறியவற்றுள் அடங்கும் என்பது]

397. நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்
மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப. (அஎ)

---

[1] தனித்லை. [2] அவ்வியல் அல்லது.

[மோனைத்தொடை ஆமாறு]

398. அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை. (சுஅ)

[எதுகைத்தொடை ஆமாறு]

399. அஃதொழித் தொன்றின் எதுகை ஆகும். (சுகூ)

[மேற்கூறிய தொடைகளுக்குரிய எழுத்து மாறுபாடு]

400. ஆயிரு தொடைக்கும் கிளையெழுத் துரிய. (கூ0)

[முரண்தொடை ஆமாறு]

401. மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே.

[இயைபுத்தொடை ஆமாறு]

402. இறுவாய் [1] ஒப்பினஃ தியைபென மொழிப. (கூஉ)

[அளபெடைத் தொடை ஆமாறு]

403. அளபெழின் அவையே அளபெடைத் தொடையே.

[பொழிப்புத் தொடை ஆமாறு]

404. ஒருசீர் இடையிட் டெதுகை யாயிற்
பொழிப்பென [2] மொழிதல் புலவர் ஆறே. (கூச)

[ஒரூஉத்தொடை ஆமாறு]

405. இருசீர் இடையிடின் ஒரூஉவென மொழிப. (கூரு)

[செந்தொடை ஆமாறு]

406. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவரது செந்தொடை என்ப. (கூகூ)

---

[1] ஒன்றல் இயைபின் யாப்பே. [2] மொழிப.

[மேற்கூறிய தொடைகளின் விரியாமாறு]

407. மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே,
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்
றொன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே. (கூள)

[மேலும் விரிப்பின் தொடைகள் அளவின்றிப் பெருகும் என்பது]

408. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில[1] வாகும். (கூஅ)

[தொடையின் வகையெல்லாம் மேற்கூறியவற்றுள் அடங்கும் என்பது]

409. தொடைவகை நிலையே ஆங்கென மொழிப. (கூகூ)

[நோக்கு என்னும் உறுப்பு ஆமாறு]

410. மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே. (க00)

[பாவகை நான்கு என்பது]

411. ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே. (க0க)

[மேற்கூறிய பாக்கள் பொருட்குரியன ஆகும் என்பது]

412. அந்நிலை மருங்கின் அறமுதல் ஆகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப. (க0உ)

---

[1] பல்கும்.

[மேற்கூறிய நான்கு பாக்களும் ஆசிரியம், வெண்பா
என்னும் இரண்டு பாவினுள்ளும் அடங்கும் என்பது]

413. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா என்றாங்
காயிரு பாவினுள் அடங்கும் என்ப. (௧0௩)

[வஞ்சிப்பா ஆசிரியநடையையும், கலிப்பா வெண்பா
நடையையும் பெறும் என்பது]

414. ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப. (௧0௪)

[நான்கு பாக்களும் வாழ்த்தியலுக்குரிய என்பது]

415. வாழ்த்தியல் வகையே [1] நாற்பாக்கும் உரித்தே. ()

[புறநிலை வாழ்த்துக்குரிய பாக்கள்]

416. வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ. (௧0௬)

[வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ
ஆகிய மூன்றிற்கும் உரிய பாக்கள்]

417. வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி [2] வுறூஉவென் றவையும் அன்ன. (௧0எ)

[வாயுறை வாழ்த்து ஆமாறு]

418. வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொற்

---

1 நாற்பாற்கும். 2 வுறூஉவென அவையும்.

றுங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே. (க0அ)

[அவையடக்கியல் ஆமாறு]

419. அவையடக் கியலே அரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே. (க0கூ)

[செவியறிவுறூஉ ஆமாறு]

420. செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
[1] அவிதல் கடனெனச் செவியுறுத் [2] தற்றே. (கக0)

[சில செய்யுட்கு உரிய அடிவரையறை]

421. ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்
குட்டமும் நேரடிக் கொட்டின என்ப. (ககக)

[குட்டத்தின் ஈற்றயலடி முச்சீரானும் வரும் என்பது]

422. குட்டம் எருத்தடி உடைத்தும் ஆகும். (ககஉ)

[மண்டிலம் குட்டம் என்பவற்றிற்கு உரிய ஓசை ஆமாறு]

423. மண்டிலம் குட்டம் என்றிவை இரண்டும்
செந்தூக் கியல என்மனார் புலவர். (ககங)

[வெண்பாவை ஒட்டிப் பிறக்கும் பா]

424. நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ
டொத்தவை எல்லாம் வெண்பா யாப்பின. (ககச)

---

1 நவிலுதல். 2 தன்றே.

[கைக்கிளைப் பாவிற்கு உரிய இலக்கணம்]

425. கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே. (கசரு)

[பரிபாடற்கு உரிய இலக்கணம்]

426. பரிபா டல்லே தொகைநிலை [1] வகையின்
இதுபா என்னும் இயனெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப. (கசசு)

[பரிபாடற்கு உரிய உறுப்புக்கள்]

427. கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும். (கசஎ)

[மற்றும் பரிபாடற்குரிய உறுப்புக்கள்]

428. சொற்சீர் அடியும் முடுகியல் அடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும். (கசஅ)

[சொற்சீரடி ஆமாறு]

429. கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து
முட்டடி இன்றிக் குறைவுசீர்த் தாகியும்
ஒழியசை யாகியும் வழியசை புணர்ந்தும்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே. (கசகூ)

[அங்கதப்பாட்டு இருவகைத்து என்பது]

430. அங்கதந் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே. (கஉ0)

[செம்பொருள் அங்கதம் ஆமாறு]

431. செம்பொருள் [2] ஆயின் வசையெனப் படுமே. (கஉக)

---

1 விரியின். 2 ஆவன.

[மறைபொருள் அங்கதம்]

432. மொழிகரந்து [1]மொழியினது பழிகாப் பாகும்.()

[செய்யுட்பகுதி இரண்டென்பது]

433. செய்யுட் டாமே இரண்டென் மொழிப. (கஉங)

[செவியுறைச் செய்யுள் ஆமாறு]

434. தூகளொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயிற்
செவியுறைச் செய்யுள் அதுவென மொழிப. (கஉச)

[அங்கதச் செய்யுள் ஆமாறு]

435. வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர். (சஉரு)

[கலிப்பாவின் பாகுபாடு]

436. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே. (கஉசா)

[ஒத்தாழிசைக்கலி இருவகைத்து என்பது]

437. அவற்றுள்
ஒத்தா ழிசைக்கலி இருவகைத் தாகும். (கஉஎ)

[நான்கு உறுப்புப் பெறும் ஒத்தாழிசைக் கலி]

438. இடைநிலைப் [2]பாட்டே தரவுபோக் கடையென
நடை[3]நவின் றொழுகும் ஒன்றென மொழிப.(கஉஅ)

[தரவிற்கு அடி வரையறை]

439. தரவே தானும் நாலடி இழிபாய்
ஆறிரண் [4]டுயரவும் பிறவும் பெறுமே. (கஉகூ)

---

[1] சொல்லினது. [2] பாட்டுத். [3] பயின். [4] டுயர் பேறவும்.

[தாழிசைக்கு அடி வரையறை]

440. இடைநிலைப் பாட்டே
தரவகப் பட்ட மரபின என்ப. (கரு0)

[தனிச்சொல் பயின்றுவரும் இடம்]

441. அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகும் [1]ஆங்கென மொழிப. (கருக)

[சுரிதகம் ஆமாறு]

442. போக்கியல் வகையே வைப்பெனப் படுமே
தரவியல் ஒத்தும் அதனகப் [2]படுமே
புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே. (கருஉ)

[தேவர்ப் பராவலைப் பற்றிவரும் ஒத்தாழிசைக் கலி]

443. ஏனை ஒன்றே
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே. (கருங)

[மேற்கூறிய ஒத்தாழிசைக்கலி இருவகைத்து என்பது]

444. அதுவே
வண்ணகம் ஒருபோ கெனவிரு வகைத்தே. (கருச)

[வண்ணக ஒத்தாழிசை ஆமாறு]

445. வண்ணகம் தானே
தரவே தாழிசை எண்ணே வாரமென்
றந்நால் வகையிற் றோன்றும் என்ப. (கருரு)

[வண்ணக ஒத்தாழிசைத் தரவின் அடி வரையறை]

446. தரவே தானும்
நான்கும் ஆறும் எட்டும் என்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும். (கருசு)

---

[1] ஆங்கென் கிளவி. [2] படும்.

[தாழிசைக்கு அடி வரையறை]

447. ஒத்துமூன் றாகும் ஒத்தா ழிசையே
தரவிற் சுருங்கித் தோன்றும் என்ப. (கடுஎ)

[சுரிதகத்துக்கு அடி வரையறை]

448. அடக்கியல் வாரம் தரவோ டொக்கும். (கடுஅ)

[எண்ணுக்கு அடி வரையறை]

449. முதற்றொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே. ()

[மேலதற்கோர் புறனடை]

450. எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே
சின்னம் [1] அல்லாக் காலை யான. (கசo)

[ஒருபோகு இரண்டு வகைத்து என்பது]

451. ஒருபோ கியற்கையும் இருவகைத் தாகும். (கசக)

[அவற்றின் பெயர்]

452. கொச்சக வொருபோ கம்போ தரங்கமென்
றொப்ப நாடி உணர்தல் வேண்டும். (கசஉ)

[கொச்சக ஒருபோகு]

453. தரவின் றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை இன்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கியல் இன்றி அடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது
கொச்சக வொருபோ காகும் என்ப. (கசந)

---

1 இல்லாக்.

[கொச்சக ஒருபோகிற்கு அடி வரையறை]

454. ஒருபான் சிறுமை இரட்டியதன் உயர்பே. (கசச)

[அம்போதரங்க ஒருபோகிற்கு அடி வரையறை]

455. அம்போ தரங்கம் அறுபதிற் றடித்தே
செம்பால் வாரம் சிறுமைக் கெல்லை. (கசரு)

[அம்போதரங்கத்திற்குரிய உறுப்பு]

456. எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்
அடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே. (கசசு)

[கலிவெண்பா ஆமாறு]

457. ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலாற்
றிரிபின்றி [1] முடிவது கலிவெண் பாட்டே. (கசஎ)

[கொச்சகக்கலி ஆமாறு]

458. தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்
ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே. (கசஅ)

[உறழ்கலி ஆமாறு]

459. கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே. (கசகூ)

[ஆசிரியப்பாவின் அடி வரையறை]

460. ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிரம் ஆகும் இழிபுமூன் றடியே. (கருo)

---

[1] வருவது.

[வெண்பாவின் அடி வரையறை]

461. நெடுவெண் பாட்டே முந்நான் கடித்தே
குறுவெண் பாட்டிற் களவெழு சீரே. (கருக)

[அங்கதப் பாட்டிற்கு அடி வரையறை]

462. அங்கதப் [1] பாட்டள வவற்றோ டொக்கும். (கருஉ)

[அடிவரையறை பெறாப் பாட்டுக்கள்]

463. கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை என்றிவை
[2] தொகைநிலை அளவின் அடியில என்ப. (கருங)

[மருட்பாப்பற்றி வரும் செய்யுள்]

464. புறநிலை வாயுறை செவியறி வுறாஉவெனத்
திறநிலை மூன்றும் திண்ணிதிற் றெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப. (கருச)

[பரிபாடற்கு அடி வரையறை]

465. [3] பரிபாடல்லே
நாலீ ரைம்ப துயர்படி யாக
ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை. (கருரு)

[மேற்கூறியனவே அளவின் அமைவன என்பது]

466. அளவியல் வகையே அனைவகைப் படுமே. (கருசு)

[செய்யுள்நிலங்கள் எழனுள் 'பாட்டு' ஒழிந்த ஆறும்
அடி வரையறைபெறா என்பது]

467. எழுநிலத் தெழுந்த செய்யுட் டெரியின்
அடிவரை இல்லன ஆறென மொழிப. (கருஎ)

---

[1] பாட்டவற் றளவோ. [2] தொகுநிலை. [3] பரிபாட்டெல்லை.

[அவ்வாறும் ஆவன]

468. அவைதாம்
நூலி னான உரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான. (கருஅ)

[நூல்]

469. அவற்றுள்
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு [1] புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே. (கருகூ)

[நூலின் பாகுபாடு நான்கு என்பது]

470. அதுவே தானும் [2] ஒருநால் வகைத்தே. (கசுo)

[அந் நான்கும் ஆமாறு]

471. ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த ஓத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றாங்களை மரபின் இயலும் என்ப. (கசுக)

[சூத்திரம்]

472. அவற்றுள்
சூத்திரம் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி

1 பொருந்தி. 2 ஈரிரு.

நாடுதல் இன்றிப் பொருணனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே. (கசுஉ)

[ஒத்து]

473. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை ஒருவழி வைப்ப
தோத்தென மொழிப உயர்மொழிப் புலவர். (கசுங)

[படலம்]

474. ஒருநெறி இன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரினது படலம் ஆகும். (கசுச)

[பிண்டம்]

475. மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்
தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப. (கசுரு)

[உரையின் பாகுபாடு நான்கு என்பது]

476. பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
[1]பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப. (கசுசு)

[உரை இரண்டுவகைத்து என்பது]

477. அதுவே தானும் [2]இருவகைத் தாகும். (கசுஎ)

[அவ் விரண்டிற்கும் உரியார் இவர் என்பது]

478. ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே
ஒன்றே யார்க்கும் வரைநிலை இன்றே. (கசுஅ)

---

1 பொருளொடு புணராப். 2 ஈரிருவகைத்தே.

[பிசியும் அதன் வகையும்]

479. ஒப்பொடு புணர்ந்த உவமை யானும்
தோன்றுவது கிளந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே. (கசுகூ)

[முதுசொல்]

480. நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடை மையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப. (களO)

[மந்திரம்]

481. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப. (களக)

[குறிப்பு மொழி]

482. எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்புமொழி என்ப. ()

[பண்ணத்தி]

483. பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் [1]இயல்பே பண்ணத் தியே. (களஙு)

[பண்ணத்தி பிசியோடு ஒக்கும் என்பது]

484. அதுவே தானும் பிசியொடு மானும். (களச)

[பண்ணத்திக்கு அடி வரையறை]

485. அடிநிமிர் கிளவி ஈரா றாகும்
அடியிகந்து வரினும் கடிவரை இன்றே. (களரு)

---

[1] இயல் பண்ணத்தி இயல்பே.

[மேற் கூறியவற்றுக்கெல்லாம் புறனடை]

486. கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின்
அளவியல் வகையே அனைவகைப் படுமே. (சஎசு)

[திணையேழும் முற்கூறிய முறையே பெறும் என்பது]

487. கைக்கிளை முதலா ஏழ்பெருந் திணையும்
முற்கிளந் தனவே [1] முறையி னான. (சஎஎ)
